# “தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்வோம்”

## நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு பெறத் தகுதியான நபர்கள்/குடும்பங்களை அடையாளம் காணுதல்-2022

### தகுதியான பயனாளிகளின் பெயர்ப் பட்டியலை பகிரங்கப்படுத்தல்

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 9 வது பிரிவின்படி நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட **“அஸ்வெஸ்ம”** நலன்புரி திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டத்தின் மூலம் நலன்புரி நன்மைகள் பெற்றுக்கொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான பயனாளிகளின் பெயர்கள் பட்டியல். 2023/06/20 இலிருந்து பகிரங்கமாக வெளியிடப்படும்.

அதன்படி, **www.wbb.gov.lk** நலன்புரி நன்மைகள் சபையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **“அஸ்வெஸ்ம”** தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியல்-2022” பகுதியினுள் சென்று, மாவட்ட/பிரதேச செயலகப் பிரிவு/கிராம சேவையாளர் பிரிவு அளவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியலை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பார்க்கலாம்

மேலும், நீங்கள் வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம மட்டத்தில் உள்ள ஏனைய அரச அலுவலகங்களில் தகுதியான பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும்.

### ஆட்சேபனைகள்/உரிமை கோரிக்கைகளை (மேன்முறையீடுகள்) ஏற்றுக்கொள்ளல்

நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் பிரிவு 11 (1) இன் படி தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பெயர்களுக்கு எதிராக ஆட்சேபனைகள்/உரிமைக்கோரிக்கைகளை (மேன்முறையீடுகள்) என்பனவற்றைப் பெற நலன்புரி நன்மைகள் சபை முடிவு செய்துள்ளது. அதன்படி, மேல்முறையீடு செய்பவர்கள் மற்றும் ஆர்வமுள்ள குடிமக்கள் தங்கள் ஆட்சேபனைகள்/உரிமைக்கோரிக்கைகளை (மேன்முறையீடுகள்) சமர்ப்பிக்கலாம்.

தரவு கணக்கீட்டிற்கு உட்படுத்தப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்கள் வழங்கிய தகவலின் படி அதன் சரியான தன்மையை பின்வரும் www.wbb.gov.lk என்ற வலைத்தளத்தில் உள்நுழைந்து உங்களின் எண்ணிடப்பட்ட தரவுகளை மீண்டும் பார்வையிடலாம்.

தகவலில் ஏதேனும் தவறு அல்லது மாற்றம் இருந்தால், கீழே காட்டப்பட்டுள்ள படி உங்களின் உரிமைக்கோரிக்கையை (மேன்முறையீடு) சமர்ப்பிக்கலாம்.

tamilguru.lk

- **ஆட்சேபனைகள்**

  தகுதியான பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஒருவர் வழங்கிய தகவல்களில் ஏதேனும் தவறு இருப்பதாக அவதானிக்கும் எந்தவொரு நபரும் தனது ஆட்சேபனையை எழுப்பலாம்.

- **உரிமைக்ரோரிக்கைகள் (மேன்முறையீடுகள்)**

  இந்தத் திட்டத்திற்கான முதற்கட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள், அந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வழங்கப்பட்ட தகவல்களில் தவறு/மாற்றம் இருப்பதாகவும், தகுதியானவர்களின் பட்டியலில் தங்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் கருதுபவர்கள்

  மற்றும்

  திட்டத்திற்கான முதற்கட்ட விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருந்தாலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு உத்தியோகத்தர் ஒருவர் வீட்டிற்குச் செல்லவில்லை அல்லது கணினியில் தரவு சேர்க்கப்படவில்லை என்றால், அத்தகைய விண்ணப்பதாரர்களும் உரிமைக்கோரிக்கை (மேன்முறையீடு) செய்யலாம்.

### ஆட்சேபனைகள்/உரிமைகோரல்கள் (மேல்முறையீடுகள்) எவ்வாறு சமர்ப்பிப்பது.

- ஆட்சேபனைகள்/உரிமைகோரல்கள் சமர்ப்பித்தல் பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றில் 2023 ஜூன் 30 தேதிக்கு முன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**www.wbb.gov.lk** என்ற நலன்புரி நன்மைகள் சபையின் இணையதளத்தில் உள்நுழைந்து ஆட்சேபனை/உரிமைக்ரோரிக்கை (மேன்முறையீடு) படிவத்தை அனுகவும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் போன்றே உங்கள் கோரிக்கையை **இலத்திரனியல்-விண்ணப்பத்தில்** உள்ளிடவும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி உங்களின் ஆட்சேபனைகள்/உரிமைக்கோரிக்கை (மேன்முறையீடு) தயாரித்து நீங்கள் வசிக்கும் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கவும்.

நலன்புரி நன்மைகள் சபையின் **விரைவு தொடர்பு எண் 1924** ஐ (Hotline) அழைத்து உங்கள் ஆட்சேபனைகள்/உரிமைக்கோரிக்கை (மேல்முறையீடுகள்) பற்றி தெரிவிக்கவும்.

### வங்கிக் கணக்கு ஆரம்பித்தல்

நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகள் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட வேண்டும் என்பதால், ஆரம்பத் தெரிவுப் பட்டியலில் உள்ள ஏற்கனவே வங்கிக் கணக்கு இல்லாத தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

- முதல் கட்டத்தின் கீழ், ஆட்சேபனைகள்/உரிமைகோரிக்கைகள் (மேன்முறையீடுகள்) சமர்ப்பிக்காத தகுதியுள்ள பயனாளிகளுக்கு நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகள் நேரடியாக வங்கி ஊடக வழங்கப்படும்.

#### ஆட்சேபனைகள்/உரிமைகோரிக்கைகள் (மேன்முறையீடுகள்) முன்வைக்கும் விண்ணப்பம்.

(நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 11ஆம் பிரிவின் படி)

1.0. அளிக்கப்பட்ட புகாரின் தன்மை :-
(தொடரிபுடைய விடைகளுக்கு முன்னால் ✓ அடையாளம் இடவும்)

| | |
|---|---|
| ஆட்சேபனை | |
| உரிமைக்கோரிக்கை (மேன்முறையீடு) | |

1.1. முழு பெயர் :-
(உரிமைக் கோரிக்கையாளர்/ஆட்சேபனையாளர்/குடிமக்கள்)

1.2. வீட்டு அலகு எண் :-
(உரிமைக் கோரிக்கையாளர்/ஆட்சேபனையாளர்)

1.3. தேசிய அடையாள அட்டை எண் :-
(ஆட்சேபனையாளர்/குடிமக்கள்)

1.4. முகவரி :-

1.5. தொலைபேசி எண் :-
(தகவல்கள் மறறும் கூடுதல் விவரங்களைப்)

1.6. உரிமைகோருபவர் வழஙகியிருந்த தகவலில் ஏதேனும் பிழைகள்/வேறுபாடுகள் இருந்தால், அதனைத் திருத்தி உள்ளிடவும்.

(உரிமைகோருபவர்களுக்கு மட்டும்.)

கீழே உள்ள அட்டவணையை நிரப்புவதற்கு முன்னர் கணக்கீட்டில் வழங்கப்பட்ட தகவல்களைப் பார்க்கவும்

| பிரதான பரிமாணங்கள் | துணை பரிமாண எண் | திருத்துவதன் மூலம் உள்ளிட வேண்டிய தகவல் |
|---|---|---|
| 01. குடும்பம் | | |
| 02. கல்வி | | |
| 03. சுகாதாரம் | | |
| 04. சொத்து | | |
| 05. கபல்நடைகள் | | |
| 06. வீடமைப்பு | | |
| 07. சுகாதார பாதுகாப்பு மற்றும் ஒளியூட்டலின் பிரதான மூலம் | | |
| 08. குடும்ப மக்கள் தொகை | | |

(ஆட்சேபனையாளர்களுக்கு மட்டும்)

1.7. ஆட்சேபனையை முன்வைப்பது யார் :-
(உரிய விடைகளுக்கு முன்னால் ✓ அடையாளம் இடவும்)

| | |
|---|---|
| இத் திட்டத்தில் பதிவுசெய்துள்ள விண்ணப்பதாரர் | |
| வேறு வெளியாளொருவர் | |

1.8. ஆட்சேபனைக்கு இலக்காகுபவரின் பெயர் :-

1.9. ஆட்சேபனைக்கு இலக்காகுபவரின் அலகு எண் :-

1.10. ஆட்சேபனைக்கு இலக்காகுபவரின் முகவரி :-

2.1. ஆட்சேபனை முன்வைக்கப்படும் உரிய பகுதியில் சரியானவற்றை உள்ளிடவும்
(உரிய விடைகளுக்கு முன்னால் ✓ அடையாளமிடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | வருயமானம் மற்றும் செலவு | | 04. | குடும்பம் | |
| 02. | சொத்துக்கள் தொடர்பாக | | 05. | வேறு விடயங்கள் | |
| 03. | வீடு தொடர்பாக | | | | |

2.2. ஆட்சேபனை பற்றிய மேலதிக விபரங்கள் இருப்பின் இங்கே தெரிவிக்கவும்.

(50 சொற்கள் மட்டும்)

மேலே என்னால் அளிக்கப்பட்ட தகவகள் யாவும் உண்மையானதும் மற்றும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகிறேன்

.................................................... ....................................................
கையொப்பம் திகதி
(உரிமைக் கோரிக்கையாளர்/ஆட்சேபனையாளர்/குடிமக்கள்)

தலைவர்/ஆணையாளர்
நலன்புரி நன்மைகள் சபை
01 ஆம் மாடி, புதிய கட்டிடம், நிதி அமைச்சு, கொழும்பு 01.

விரைவு தொடர்பிற்கு **1924**